ஸ்ரீதந்வந்த்ரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

ஸாதாரண
மார்கழி

JANUARY
1971

தொகுதி 33
பகுதி 1

Vol. 33
No. 1

ஆசிரியர் :
வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S ராம சர்மா.

பிரசுரகர்த்தா :
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

ருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

தேசீய வைத்யம் ... 7
வைத்திய மசோதா ... 9
இந்திய வைத்தியம் .. 11
ஸஹஸ்ரயோகம் ... 13

காரியாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்யரத்னம் P. S. வாரியருடைய
ஆர்ய வைத்தியசாலா
கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

THE ARYA VAIDYA SALA KOTTAKAL

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - மேனேஜிங் டிரஸ்டி - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31

நர்ஸிங்ஹோம்		போன் நெ. 44
தலைமை வைத்யர்		போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி	(வீடு)	போன் நெ 27
மானேஜர்	(வீடு)	போன் நெ. 26

சென்னை கிளை :

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள் :

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் கோல்டன் ஜுபிலி நர்ஸிங்ஹோமில் நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்.,

[ஸ்தாபிதம் 1939.]

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் அண்டு விற்பனை டிப்போ:
31, A. சின்னக் கடைத்தெரு,
திருச்சிராப்பள்ளி–2.
Phone No. 4202

வைத்தியர்களுக்குத் தேவையான எல்லா சிறந்த
ஆயுர்வேத மருந்துகளும்
வைத்தியர்களுக்கென விசேஷச் சலுகையுடன்
குறைந்த விலையில் மொத்தமாகவும்,
சில்லரையாகவும் கிடைக்கும்.

எமது விசேஷ புத்தக வெளியீடு-1.

எமது ஸ்தாபனத்தில் கிடைக்கும் மருந்துகளின்
செய்முறையை விளக்கும்

ஔஷத யோக ஸங்கிரஹம்

முதல் பாகம்

பிரதி விலை ரூ. 5–00. தபால் செலவு தனி.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்

T. S. ஈச்வரன், L.I.M. மானேஜிங் டைரக்டர்.

GRAM: KALIA

Phone: Off. 3232 / Res. 4343

KALIA BROTHERS (Regd.)

INDIAN DRUGS MERCHANTS

JULLUNDUR CITY. (INDIA)

Price List	Rs. ps.
Pure Musk per gram	50-00
Pure Saffron	2-00
Pure Gorochanam per gram	9-00
Pure Pearls Spl. ,,	10-00
,, No. 2 ,,	7-00
,, No. 3 ,,	4-00
Pure Ambar No. 1 ,,	3-50
,, No. 2 ,,	2-50
,, No. 3 ,,	2-00
Pure Silver Leaves ,,	0-80

PACHAKARPURAM

Spl. Bhimseni per gram	0-30
Singapuri (Yellow) ,,	0-25
German or Japan ,,	0-20
Powder Pachakarpuram	0-06
Pure Menthol ,,	0-45
Pure Thymol ,,	0-20
Ashtavargam per Kilo	7-50
Jiwak Rishwak ,,	2-50
Meda Mahameda ,,	8-00
Kakoli Kshir Kakoli ,,	8-00
Ridhi Vridhi	12-00
Silajit (Kalmodam)	
Suryatapi Silajit No. 1 ,,	100-00
No. 2 ,,	85-00

CRUDE DRUGS

Attis Bitter ,,	100-00
Beedana ,,	20-00
Guggulu Shudh ,,	12-00
Gowela ,,	60-00

Price List	Rs. Ps.
Kuth No. 1 per Kilo	5-00
Moosli White ,,	15-00
Pushkar mool ,,	5-00
Rose Flower Dry ,,	10-00
Som Lata ,,	10-00
Salib Panja ,,	85-00
Salib Gatha ,,	20-00
Shingraf ,,	300-00
Tiger's Fat ,,	45-00
Bears Fat ,,	40-00
Pure Vanslochan ,,	80-00

AYURVEDIC MEDICINE

Chander Prabha per Kilo	70-00
Chavan prash ,,	10-00
Gudoochi Sattoo (Sindi Maw) ,,	12-00
Ras Sindur ,,	300-00
Shudh parad ,,	300-00
Swaran V ng ,,	200-00
Yogaraj Guggulu ,,	30-00
Kaishore ,, ,,	30-00
Maha Yogaraj ,, ,,	140-00
Abrak Bhasam ,,	200-00
KantLoh Bhasam ,,	85-00
Loh Bhasam Special ,,	150-00
Shring Bhasam ,,	35-00
Sankh Bhasam ,,	30-00
Mandur Bhasam ,,	35-00
Silajit Bhasam ,,	35-00
Silver Bhasam ,,	700-00
Swaran Makshik ,,	80-00
Sulphur Purified ,,	50-00
Tamber Bhasam ,,	300-00
Sidh Makar Dhwaj per gram	4-20
Makar Dhwaj ordinary	0-80

Please ask for detailed Price List 6¼% Commission to the readers of Vaidya Chandrika

தந்தி: "அம்ருதம்" P. B. No. 1382. போன்: 26006

ஸ்ரீ ஆர்ய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்) லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD
AVP

உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.

எங்களுடைய கிளைகள்:

1.	23 B, பூஸா ரோடு, புது டில்லி :	போன் ;	585687
2.	மொயிதீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1	,,	2984
3.	கௌடியா மடத்தெரு, மதராஸ்-14	,,	85752
4.	வளிஞ்ஞம்பலம், எர்ணுகுளம், கொச்சின்-18	,,	32988
5.	பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1	,,	92
6.	மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1	,,	195
7.	கடைவீதி, பொன்னானி	,,	41
8.	ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1	,,	378
9.	கோர்ட் ரோடு, ஆலத்தூர்	,,	87
10	மெயின் ரோடு, கஞ்சிக்கோடு		
11.	ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18	,,	33758
12.	இந்திரா பில்டிங் கள்ளிக்கோட்டை-2	,,	4891
13.	229, ராஜவீதி, கோயமுத்தூர்-1	,,	33988
14.	T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2		
15	No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி)		

பாக்டரி:
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன்: 2)

நர்ஸிங்ஹோம்:
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன்: 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க:—

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும் :

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினால் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00 ; 12 ML. ரூ 3–75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனுபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 **வீடு போன் : 6074**

[1936-ல் நிறுவப்பட்டது.]

PURI BROTHERS (REGD.)

Musk, Saffron and Indian Drugs Merchants

JULLUNDUR-1

Tele : " VENKATESH " Phone : **3923**

PRICE LIST FOR 1970

		Rs. P.
Pure Musk	per gram	35-00
Pure Saffron	,,	1-75
Pure Gorochanam	,,	9-00
Pu.e Pearls special	,,	10-00
Pure Pearls No, 2.	,,	8-00
Pure Pearls No. 3.	,,	6-00
Pure Amber No. 1	per gm.	4-00
Pure Amber No. 2	,,	3-50
Pure Amber No. 3	,,	3-00
Pure Amber Black	,,	1-00
PACHAKARPURAM		
Spl. Bhimseni	per gram	0-25
Singapuri (Yellow)	,,	0-20
German or Japan		0-20
Ashtavargam	per Kilo	14-00
Jiwak Rishwak	,,	2-50
Meda Mahameda	,,	8-00
Kakoli Kashir Kakoli	,,	14-00
Ridhi Vridhi	,,	12-00
Suryatapi Silajit		
No. 1	per Kilo	100-00
No. 2.	,,	85-00
BHASAMS		
Rajit Bhasam	per K. G.	1000-00
Tamber Bhasam	,,	220-00
Abhrak (100 times)	,,	230-00
Abhrak (60 times)	,,	160-00
Bang Bhasam	,,	160-00
Akik Bhasam	,,	50-00
Shilajit	,,	30-00
Annabedi Bhasam	,,	30-00
Swaran Makshika	,,	60-00
Nag Bhasam	,,	120-00
Pearl Bhasam		
	per ten gram	100-00
Parda Bhasam	,,	10-75

		Rs. P.
Hingul Bhasam	per ten gm.	10-75
Loh Bhasam (special)		
	per K. G.	130-00
Loh Bhasam No. 1	,,	75-00
Mandur Bhasam	,,	30-00
Sankh Bhasam	,,	30-00
Shring Bhasam	,,	30-00
Vaikrant Bhasam	,,	180-00
Hartal Godanti	,,	30-00
Kant Loh Bhasam	,,	250-00
Parwal Bhasam	,,	175-00
PILLS (GUTTIKA)		
Agnitundi Vati	per ten gm.	1-00
Basant Kushmakar	,,	50-00
Chander Odya Ras	,,	40-00
Sanjeevani Vati	,,	6-00
Eladi Vati	per K. G.	35-00
Echha Bhedi Ras	,,	60-00
Kaf Ketu Ras	,,	50-00
Kan Kayan Vati	,,	45-00
Khadi Radi Vati	,,	45-00
Lavangadi Vati	,,	120-00
Mritunjaya Ras	,,	125-00
Mandur Vati	,,	40-00
Sankh Vati	,,	50-00
Shul Gaj Kesar Vati	,,	80-00
Nityodit Ras	,,	125-00
Chander Prabha Vati		60-00
Maha Jograj Guggal	,,	110-00
Jograj Guggal	,,	35-00
Kishore Guggal	,,	33-00
Kanchanar Guggal	,,	35-00
Raj Parsadani Vati	30 pills	1-00
Mridu Virechan	1000 ,,	16-00
Leucorhin	1000 ,,	50-00
Kasari Pills	1000 ,,	30-00

5% Commission will be allowed on all orders received direct by us

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 33	சாதாரண மார்கழி	பகுதி 1
Vol. 33	1971 ஜனவரி	No. 1

நம: சிவகுமாராய.

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुवर्यकलानिधिः ।
यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

தேசீய வைத்யம்

கம்பர், கச்சியப்பர், வில்லிப்புத்தூரார் முதலானவர்களின் காவியங்களை ரஸிப்பவர்களுக்கு இவைகள் தாய்மொழியில் உள்ளதால் அதிக சுதந்திரமும் ருசியும் ஏற்படுவது இயல்பு. இதற்காக இதர மொழிகளைப் பழிக்கவேண்டுமென்றோ, ஏற்கக் கூடாது என்றோ அர்த்தமில்லை. அதேபோல் நமது தேசத்து வைத்யம் என்பதாலே தேசாபிமானம் உள்ளவர்களுக்கு ஒரு ருசி தோன்றக்கூடும். இது இயல்பு, தவிர தேசீய வைத்ய முறையில் பட்சபாதமில்லாத மனப்பான்மையுடன் பல கமிஷன்களை ஏற்படுத்தி அவை சாஸ்திரீயமானவை, விஞ்ஞானத்திற்குச் சரியானவை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. விரிவான பல நூல்களை முன்னோர்கள் எழுதியுள்ளனர். சரகம் முதலிய புத்தகங்களைப் படிப்பவர்களுக்கு பல விஷயங்கள் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கும் என்பது அறிவாளிகளின் அனுபவம். தற்காலத்திலும் பழய கிரந்தங்களுக்கு உரைகளாகவும், அல்லது புதியனவாகவும் பல புத்தகங்கள் தோன்றியுள்ளன. இனியும் தோன்றவும் கூடும். அரசாங்க ஆதரவு குறைந்த காலங்களில் சிறிது பின் தங்கிப்போவது எதற்கும்

ஏற்படக் கூடியதே. சுமார் ஒரு நூற்ருண்டு காலமாக ஆங்கில வைத்யம் அரசாங்க ஆதரவை முழுமுச்சுடன் பெற்றதால் இன்று தலைசிறந்து விளங்குவதாகக் கூறப்படுகிறது. பல நூற்ருண்டு களாக மாற்ருந்தாய் குழந்தைபோல பராமரிக்கப்படும் நாட்டு வைத்யம் உடல் இளைத்து சத்துக்குறைந்ததாக இருந்தாலும் இன்றும் உயிருடன் உலாவுவது நமது நல்ல காலம் என்றே கூறவேண்டும். பகீரதன் கங்கை நதியைக் கொண்டுவரச் செய்த முயற்சிகள்போல் நமது முன்னேர்கள் நாட்டு வைத்ய முன்னேற்றத்திற்குப்பட்டுள்ள பாடு மிகவும் போற்றத்தக்கன. கடைசியாக பண்டிட் ஸ்ரீ சிவசர்மா, ஸ்ரீ அனந்ததிரிபாடிசர்மா முதலானவர்களின் முயற்சியால் தேசீய வைத்யத்திற்கு ஓர் தனிக் கவுன்ஸில் தோற்றுவிக்க ஏற்பாடுஆகி உள்ளது. (இது விஷய மாக தினமணியில் வந்த சமாசாரங்களை வெளியிட்டுள்ளோம்) இனி இதில் நல்ல அறிவாளிகள் சேர்ந்து நமது வைத்யத்தை நல்ல முறையில் வளர்க்கவேண்டும். அடிப்படைத் தத்வங்கள் அஸ்திவாரம் போன்றவை. அவைகளில் நல்ல அறிவு ஏற்படக் கூடிய முறையில் போதனையும் பயிற்சியும் ஏற்படவேண்டும். வியாதிகளைக் கண்டுபிடிப்பது, வியாதிகளுக்குப் பரிகாரம் தேடுவது இவை எல்லாம் இஷ்டப்படி இருக்கக்கூடாது. திரிதோஷ தத்வங்களை அனுசரித்து இருக்கவேண்டும். அப்படி இருந்தால் தான் தேசீய வைத்யம் கைகண்ட பயனைத் தரக்கூடியதாக இருக்கும். ஆனால் நவீனக் கருவிகள் பல நிறைந்த இக்காலத்தில் இவ்வளவு தூரம் மூளையை சிரமப்படுத்திக்கொள்ள பொறுமை வேண்டும். எல்லாக் கருவிகளுக்கும் மேலானது மனிதனின் மூளையின் சக்தி. அதை வளர்ப்பதுதான் புத்திசாலித்தனம். இதற்காக ஆபத்தான சமயத்தில் கருவிகளின் உபயோகம் வேண்டாம் என்பது பொருள் இல்லை. நல்ல முறையில் ஞானத்தை வளர்க்க முயற்சி செய்யவேண்டும். ஆங்கில வைத்ய முறையில் உள்ள சில விஷயங்கள் தேசீய வைத்ய முறையில் இல்லை என்ற வாதம் நாளடைவில் போகும்படி செய்யவேண்டும். அஷ்டாங்கம் (எட்டு அங்கம்) தவிர எந்த அங்கமும் புதியதாக ஏற்படவில்லை, ஏற்படவும் முடியாது. தற்காலத்து மூளைக்குத் தகுந்தபடி சில விரிவான நூல்கள்தான் தேவை. இதை சுலபமாக ஏற்படுத்திவிடலாம். அனுபவம் பயிற்சி இவை எல்லாம் புத்தக அறிவால் மட்டும் எந்த வைத்யனும் ஏற்படுத்திக் கொள்ள முடியாது. மருந்து விஷயத்தில் தேசீய வைத்யத்தில் அபூர்வ மருந்துகள் நிறைய இருக்கின்றன. இன்னமும் கண்டு பிடிக்கலாம். ஏற்பாடுகள் தான் திறமையாக அமையவேண்டும். 71-வது வருஷத்தில் தேசீய வைத்யத்திற்கு புத்துயிர் ஏற்படும் என்று நம்புகிறேம். எல்லாம்வல்ல இறைவன் அருள்வாராக.

———

ஆயுர்வேத, சித்த, யூனானி வைத்திய முறை வளர்ச்சிக்கு தனி கவுன்ஸில் மசோதா

லோக்சபையில் வரவேற்பு

ஆயுர்வேத, யூனானி, சித்த வைத்திய முறைகளது வளர்ச்சி அபிவிருத்திக்கான தனிப்பட்ட இந்திய வைத்திய மத்தியக் கவுன்சில் ஒன்றை நிறுவ வழிசெய்யும் மசோதாவை லோக்சபையின் சகல பிரிவினரும் வரவேற்றனர்.

இம்மசோதாமீதான விவாதம் இன்னம் முடிவுபெறவில்லை. விவாதத்தின்போது இந்திய வைத்திய முறைகள் வளர ஆராய்ச்சிக்கு போதுமான வசதிகள் தரப்படாததில் சில மெம்பர்கள் வருத்தம் தெரிவித்தனர்.

இந்திய வைத்திய முறைகளை அபிவிருத்தி செய்ய நவீன விஞ்ஞான வழிகளை பயன்படுத்துமாறு சில மெம்பர்கள் யோசனை கூறினர்.

இம்மசோதா பற்றி சுகாதார குடும்பக்கட்டுப்பாடு ராஜாங்க மந்திரி திரு. பி. எஸ். மூர்த்தி பேசுகையில், ஹோமியோபதி வைத்தியத்துக்கான தனிக்கவுன்சில் ஏற்படுத்தும்படி கூட்டுத் தனிக்கமிட்டி செய்த சிபாரிசை சர்க்கார் ஏற்றுக்கொண்டது. இது சம்பந்தமான ஒரு புது மசோதா விரைவில் கொண்டுவரப் படும் என்றார்.

பிரபல ஆயுர்வேத வைத்தியர் பண்டித சிவசர்மா (சுயே.) மசோதாவை ஆதரித்துப் பேசினார். சேத்கோவிந்ததாஸ் (புதுகாங்கிரஸ்) அம்மசோதாவை ஆதரித்து திருத்தமோ, கால தாமதமோ இன்றி இது நிறைவேற்றப்பட வேண்டும் என்றார்.

இந்திய மருத்துவ மத்திய கவுன்ஸில் மசோதா

லோகசபை அங்கீகரித்தது

1970-ம் ஆண்டு இந்திய மருத்துவ மத்திய கவுன்சில் மசோதாவை லோக்சபை அங்கீகரித்தது. இந்திய மருத்துவத்தின் மூன்று முறைகளான ஆயுர்வேதம், சித்த வைத்தியம், யூனானி வைத்தியம் ஆகியவற்றின் தகுந்த வளர்ச்சியை கவனிக்கும் பொருட்டு மத்திய கவுன்ஸில் நிறுவ இம்மசோதா இடமளிக்கிறது.

இந்திய மருத்துவம் இணைக்கப்பட்ட ப்பாடத் திட்டத்தின் 50,000 பட்டதாரிகளின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு, எல்லா முயற்சிகளும், எடுக்கப்படும் என்று சுகாதார, குடும்பக்கட்டுப்பாடு ராஜாங்க மந்திரி திரு. பி. எஸ். மூர்த்தி கூறினார். இந்திய மருத்துவ ராஜ்ய ரிஜிஸ்தரில் பதிவு செய்து கொண்ட அனைவரும், அந்தந்த ராஜ்யங்களிலிருந்தும் மத்திய கவுன்ஸிலுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தகுதியானவர்கள் என்று மசோதா கூறுகிறது.

ஒரே சீரான பாடத் திட்டத்தை அமைப்பதும், குறைந்த பட்ச கல்வி தரம் ஏற்படுத்துவதும், இக்கவுன்ஸிலின் முக்கியமான பணிகளாகும்

மற்றும் ஆஸ்பத்திரி வசதிகள், பல மாநில கவுன்ஸில்கள் அளித்த பட்டம் அல்லது டிப்ளமாவை அங்கீகரித்தல் ஆகிய பணிகளையும் மேற்கொள்ளும்.

ராஜ்ய சபையில் ஏற்கனவே நிறைவேறியுள்ள இந்த மசோதா ராஷ்டிரபதியின் கையெழுத்துக்கு செல்லும். இந்த மசோதா விரைவில் நிறைவேறும் பொருட்டு லோக்சபையில் தாக்கல் செய்யப்பட்ட திருத்தங்கள் வாபஸ் பெற்றுக்கொள்ளப் பட்டன.

நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

இந்திய வைத்தியம்

ஆயுர்வேத, யுனானி, சித்த வைத்தியங்களின் முறையான அபிவிருத்திக்கு வழிசெய்வதற்கு இந்திய வைத்திய மத்திய கவுன்ஸில் என்ற ஒரு அமைப்பை மத்திய சர்க்கார் ஏற்படுத்தப் போகிறார்கள். இதற்கான மசோதா மீது லோக்சபையில் நடைபெற்ற விவாதத்தின் போது இந்த மூன்று முறைகளின் வளர்ச்சிக்கு ஆவன செய்தாக வேண்டும் என்பதை பேசிய மெம்பர்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். வளர்ச்சிப்பணி எவ்வாறெல்லாம் நடைபெற வேண்டும் என்று இனிமேல் தான் முடிவாக வேண்டும். தகுதியுள்ள வைத்தியர்களின் பதிவு, திறமையான போதனைக்கு வழி செய்வது, இந்திய வைத்திய ஆஸ்பத்திரிகள் நல்லபடி அமைந்து பணியாற்றத் துணைபுரிவது, ஆராய்ச்சி ஒழுங்காக நடைபெறச் செய்வது உட்பட எவ்வளவோ வேலைகள் இருக்கின்றன. இவையெல்லாம் ஒருங்கிணைந்தவாறு நடைபெற வேண்டுமாயின், எல்லா வகை வளர்ச்சிப்பணிகளுக்கும் யூனியன் சர்க்கார் மேல் பொறுப்பு ஏற்று, எல்லா வகை ஏற்பாடுகளையும் செய்வது அவசியம்.

இந்திய வைத்திய முறையிலும், நவீன வைத்திய முறையிலும் ஒருசேரப் பயிற்சி தருகின்ற இணைப்பு வைத்திய போதனை சில சர்வகலாசாலைகளில் இன்னும் நடந்து வருகிறது. இது சரிவர வேலை செய்யவில்லை என்ற கருத்தை விவாதத்தின் போது பண்டித சிவசர்மா தெரிவித்தார். இது பரிசீலனைக்குரியது. தமிழ்நாட்டில் இந்த இணைப்பு முறைப் போதனை பல ஆண்டுகள் நடைபெற்றது. ஆனால் அதில் கடைசியாக பயின்ற மாணவர்கள் நவீனமுறை வைத்தியர்களாகத் தாம் அங்கீகரிக்கப் படவேண்டும் என்று பெருங்கிளர்ச்சி செய்ததன் விளைவாக அந்த முறையில் போதனை கைவிடப்பட்டது. அதையடுத்து இந்திய வைத்திய முறைக் காலேஜுகள் சரிவர உருப்பெற்று திருப்திகரமாக பணியாற்றுகின்றன. என்று சொல்ல முடியாத நிலை இருந்து வருகிறது. மத்திய சர்க்கார் காட்ட முன் வந்துள்ள புது அக்கறையின் விளைவாக தென்மாநிலங்களில் முழுவசதியுடன் கூடிய இந்திய வைத்திய காலேஜுகள் விரைவில் அமைந்து திறம்பட பணியாற்றுவதற்கு வழி பிறக்குமென்று நம்புகிறோம்.

வைத்திய முறை எதுவாயினும் சரி, கோளாறுகளை சரிவர கண்டறிந்து, சிறந்த முறையில் நிவாரணம் அளிப்பதுதான் முதன்மையான பணி. இதைக் கருத்தில் கொண்டு நவீன

வைத்திய பரிசோதனை முறைகளை இந்திய வைத்தியர்கள் பயன் படுத்திக் கொள்வதன் சாத்தியக்கூறுகளை ஆராய்வது பயனுள்ள தாக இருக்கும். ரண சிகிச்சை சம்பந்தப்பட்டவரை நவீன முறைகளை இந்திய வைத்திய போதனையுடன் இணைப்பது தவிர வேறு வழி இல்லையெனத் தோன்றுகிறது.

இந்திய வைத்திய முறைகளைப் பயில்வோர் நவீன வைத்திய அடிப்படைகளையும் தெரிந்து கொள்வது மிகமிக அவசியம். பட்டப்படிப்பின் போதே இதற்கு வழி செய்வது நல்லதா, அல்லது பட்டம் பெற்ற பிறகு உயர் தகுதிகளை அடைய விரும்பு வோருக்கு உரிய விஷயமாக்கலாமா என்பது அனுபவத்தை யொட்டி நிபுணர்கள் செய்ய வேண்டிய ஆராய்ச்சி. நவீன வைத்தியமுறைப் பட்டதாரிகளும் நாட்டுமுறைகளைப் பற்றிய பரிச்சயம் பெறச் செய்வது அவசியம்.

இந்தியவைத்திய முறைகளில் இடையருது திறம்பட ஆராய்ச்சி நடந்து கொண்டே இருப்பது அவசியம். இதற்கு மத்திய சர்க்காரின் பொறுப்பில் பெரிய கேந்திரங்கள் ஏற்படுவது அவசிய மென தோன்றுகிறது. ஆராய்ச்சியின் மூலமாகத்தான், மாறி வரும் நிலைமைகளின் தேவைக்கு ஏற்ப, பரிசோதனைகளிலும் புது மருந்துகளை உருவாக்குவதிலும், அனுபவத்தில் வந்த மருந்து களைச் செம்மையாக்குவதிலும் வெற்றி காண இயலும். இந்திய வைத்திய முறைகளில் பல அபூர்வமான மருந்துகள் இருக் கின்றன என்பதை பட்சபாதமில்லாத நவீன வைத்திய நிபுணர் களே ஒப்புக்கொண்டிருக்கிறுர்கள். நவீன மருந்துகள் வியாதியை அடக்கிவிடுகின்றன. நாட்டு மருந்துகள் முழு குணம் அளிக்க வல்லவை என்ற ஒரு அபிப்பிராயம் இருந்து வருகிறது. இதில் உள்ள உண்மைகள் நவீன ஆராய்ச்சிகளின் மூலம் வெளிப் பட்டால் மனித சமூகத்திற்கு எவ்வளவோ நன்மையுண்டு.

இந்திய வைத்திய முறை மருந்துகளை அலசி ஆராய்ந்து, நவீன வைத்திய பரிபாஷையில் அவை ஒழுங்காக கிடைக்கச் செய்ய முடியுமானுல், அதனுல் நவீன வைத்திய முறையும், நன்மையடைவது நிச்சயம். இம்மாதிரி பல சிறப்புக்கள் இருப் பதன் காரணமாகத்தான் காலஞ்சென்ற டாக்டர் குருசாமி முதலியார், காப்டன் ஜி. ஸ்ரீனிவாசமூர்த்தி, டாக்டர் ஏ. லட்சுமிபதி போன்ற நவீன வைத்தியர்கள் இந்திய வைத்தியத்தின் வளர்ச்சிக்கு விசேஷ ஊக்கமளித்து வந்தனர். அவர்கள் முன்னேடிகளாக இருந்து காட்டிய வழிகளை ஆராய்ந்து, பெயரளவில் இல்லாமல் தேசமெங்கும் விரிவாகப் பயன்தரும் வகையில் இந்திய வைத்தியக் கவுன்ஸில் அமைந்து பணியாற்றும் என்றும் நம்புவோமாக. —— (தினமணி 9-12-70)

ஸஹஸ்ரயோகம்

முகரோக சிகித்ஸை (தொடர்ச்சி)

1080. உதரரோகக்குளிகை: லிங்கம், கடுக்காய், வெள்ளைக் காயம், இந்துப்பு, வெங்காரம், வசம்பு, யவக்ஷாரம் கழற்சிப்பருப்பு, வெள்ளுள்ளிப் பருப்பு இவை வகைக்கு 8 கிராம், நேர்வாள வித்து 2 கிராம், இவைகளை கல்வத்திலிட்டு கருநொச்சி ரஸத்தி லரைத்துக் குன்றிப்பிரமாணம் மாத்திரையுருட்டி நிழலிலுலர்த்தி பத்திரப்படுத்தவும். ஒரு குளிகையை இஞ்சி ரஸத்தில் சாப்பிட பேதியாகி உதரநோய்கள் தீரும் (குறிப்பு—லிங்கத்தைப் பொடி செய்து முலைப்பாலில் அரைத்து வெய்யிலில் காயவைத்துக் கொள்ள லிங்கசுத்தியாகும். நேர்வாளத்தை எருமைச்சாணியில் புதைத்து வைத்து மூன்று நாள் கழித்து எடுத்து நீரில் கழுவி பிறகு அதன் மேல் தோலையும், விதையைப் பிளந்து உள்ளிருக்கும் நாக்கையும் முளையையும் நீக்கிவிட்டுப் பிறகு பசும்பாலில் வேகவைத்து எடுத்து வெய்யலில் உலர்த்திக்கொள்ளவும். இது நேர்வாள சுத்தி).

1081. ஸர்வரோகஹரம்—சுத்தமான அரப்பொடி 250 கிராம் எடுத்துக் கல்வத்திலிட்டு வெள்ளைப்பாஷாணம் 12 கிராம், நாட்டுச் சூடம் 1 கிராம், சேர்த்துச் சோற்றுக்கற்றாழை ரஸத்தில் ஒருமணி அரைத்து பில்லைதட்டி காயவைத்து ஓட்டிலிட்டு சீலைமண் செய்து லகு புடம் இடவும். ஆறின பிறகு எடுத்துக் கல்வத்திலிட்டு சுத்தி செய்த தாளகம் 12 கிராம், நாட்டுச் சூடம் 1 கிராம் இவைகளைச் சேர்த்து முன்போல அரைத்து முன்போல புடமிடவும். ஆறின பிறகு எடுத்துக் கல்வத்திலிட்டு சுத்தி செய்த கந்தகம் (அமலஸாரம்) 12 கிராம், நாட்டுச் சூடம் 1 கிராம் இவைகளைச் சேர்த்து முன்போல அரைத்து உலர்த்தி முன்போல புடமிடவும். ஆறின பிறகு எடுத்துக் கல்வத்திலிட்டு சுத்தமான ரஸம் 12 கிராம், நாட்டுச்சூடம் 1 கிராம் சேர்த்து முன்போல அரைத்து உலர்த்தி முன்போல புடமிடவும். இவ்விதம் இதே கிரமத்தில் மறுபடியும் மூன்று தடவை புடமிடவும். ஆக மொத்தம் நான்கு தடவை இவ்விதம் வரிசையாகப் புடமிடவும். பிறகு சீசாவில் பத்திரப் படுத்திக்கொண்டு வேளைக்கு அரைக்குண்டுமணி எடை வெண்ணெய்யில் கொள்ள சகல ரோகங்களும் தீரும்.

1082. நால்பால்மராதி—நால்பால்மரத்தின் பட்டை, சரக்கொன்னே வேர்ப்பட்டை, எருக்கம்பட்டை, விச்சிவேர்பட்டை, வேம்பாளம்பட்டை, திரிபலே, விரளிமஞ்சள், வேப்பம்பட்டை, அதிமதுரம் இவை வகைக்கு 200 கிராம் இடித்துப்போட்டு ஜலம் 64 லிட்டர்விட்டு 4 லிட்டராக சுண்ட வைத்து வடிகட்டி அபின் 4 கிராம், சூடம் 4 கிராம் சேர்த்து, நல்ல சாராயம் ஒரு லிட்டர் 500 கிராம் தேனும் சேர்த்து ஒரு *சீசாவில் போட்டு 101 தடவை குலுக்கி வெய்யிலில் வைத்து மூன்று நாள் சென்ற பிறகு அதைத் துணியில் தோய்த்துப் புண்களில் போட சீக்கிரம் ஆறும்.

1083 யக்ஷதிருகாதி--கழற்சிவேரும் துளிரும் கொட்டைப் பருப்பும் சம எடை எடுத்து அரைத்து அந்தக் கல்கத்தை அவிரி வேர் போட்டு அந்த வேர் சிவக்கும் வரையில் காய்ச்சின விளக்கெண்ணெய்யில் ஷி அவிரிவேரை எடுத்துவிட்டு இந்த அரைத்த மருந்தைப்போட்டுக் கிளரி பக்குவமானபொழுது வாங்கி சுண்டைக்காய் அளவு குளிகை செய்து இரண்டுமணி நேரத்திற்கு ஒரு உருண்டை சாப்பிடவும். இவ்விதம் 5 உருண்டை சாப்பிட குடல் வாயு தீரும்.

1084 எட்டிக்கொட்டையை அரைத்து ஒரு பாக்குப்பழம் அளவிற்கு எடுத்து சமன் வெண்ணெய்யும் முலேப்பாலும் சேர்த்து நெற்றியில்போட தூக்கம்வரும்.

1085. யஷ்டியாதி—அதிமதுரம், ஜீரகம் இவை பொடி செய்து கதளிப்பழத்தில் சாப்பிட தூக்கம் வரும்.

1086 குங்கிலியாதி—(லிங்கவிரணத்தில் தாரை செய்ய) குங்கிலியம், துரிசு, துத்தம், நெல்லிக்காய், கந்தகம், ரஸம் படிக்காரம், (இதுவே சீனிக்காரம்) மனேசிலே, லிங்கம், நீலம், அபின் இவை வகைக்கு 4 கிராம் எடுத்து முதலில் நெல்லிக்காய் கந்தகம் பொடிசெய்து ரஸத்தை அதில்விட்டு அரைத்துக் கொண்டு பிறகு மற்ற மருந்துகளேச் சேர்த்து நன்ருக அரைத்து ஐந்து லிட்டர் ஜலத்தில் கரைத்து ஏழரை நாழிகை நேரம் கடைந்து பிறகு வாய்கட்டி அடைத்து மூன்று நாள் வைத்திருந்து பிறகு ஷி ஜலத்தை தினசரி வேண்டிய அளவு எடுத்து தாரை செய்யவும். புண் பறங்கிப்புண் (மேகப்புண்) தீரும்.

1087. சித்திரமூலாதி: (அர்புதத்திற்கு) சித்திரமூலம், ஆயில் பட்டை, சுக்கு, சாரணேவேர், கலப்பைக்கிழங்கு முருங்கை வேர், தந்தீமூலம், பஞ்சலவணம், திப்பிலி, மிளகு, இவைகளேக் கோமூத்திரத்தில் அரைத்துப்பூச எல்லா அர்புதமும் தீரும். மறுபடியும் வராது.

1088. நிர்குண்டியாதி: கருநொச்சிவேர், ஆடாதோடை வேர், நிலப்பனைக்கிழங்கு, இஞ்சி இவை கஷாயம்செய்து தேன் கலந்து சாப்பிட ஸ்திரீகள் யோனியில் காணும் ரக்தப்பெருக்கு நிற்கும்.

1089. அயனக்குழம்பு: முடக்குவாதம் முதலியதற்கு திரிபலை அதிமதுரம், ஆமணக்குவேர், தண்ணீர்விட்டான்கிழங்கு, குருந்தொட்டிவேர், வில்வவேர், இவை கஷாயம்வைத்து எட்டில் ஒன்ருகச் சுண்டவைத்து அதற்குச்சமம் எண்ணையும் நெய்யும் சேர்த்து இரண்டிற்கும் சமம் பால் சேர்த்து, தண்ணீர்விட்டான் கிழங்கு, காட்டு மல்லிகைவேர்ப்பட்டை, நன்னரி, தாமரை வளையம், அமரி இலை, ஆமணக்குஇலை, ஊமத்தை இலை, நெல்லி இலை, நால்பாமரத்துளிர், அருகம்புல், பொன்னங்காணி, இவை இடித்துப்பிழிந்து ரஸம் எடுத்துச் சேர்த்து திரிபலை, அதிமதுரம், கல்கப்சேர்த்துக்காய்ச்சி வடிக்கிற பாத்திரத்தில் வெள்ளைக் குங்கிலியம் பொடிசெய்துபோட்டு தேன்மெழுகும் கொஞ்சம் போட்டு சிக்கண பாகத்தில் வடிக்கவும். புண் ரக்தக்கட்டு, குத்து வலி, முடக்குவாயு, சுளுக்கு முதலியவற்றில் நன்ருகத்தேய்க்கத் தீரும்.

1090. ஆம்பல் ஆதி: ஆம்பல்தண்டு பிழிந்து பாலில் சாப்பிடவும். வெள்ளை தீரும்.

1091. தகராதி: தகரவேர் இடித்துப்பிழிந்து எண்ணையில் சாப்பிடவும். வெள்ளை தீரும்.

1092. பாவட்டாதி: பாவட்டை இலை, சீந்திற்கொடி இலை, இவை ரஸம் எண்ணையில் சாப்பிடவும். முன்குணமுண்டாம்.

1093. அபாமார்க்காதி: நாயுருவி வேரும், ஆடாதோடை வேரும், சுக்கும், சேர்த்துப் பாலில் சாப்பிடவும். சூலம் தீரும்.

1094. மூங்கில் இலை ரஸம் எடுத்துப் பாலில் சாப்பிடவும் முன்குணமுண்டாம்.

1095. க்ரமுகாதி: பாக்குமரத்துப்பூ விரியாமல் இருக்கும் பொழுது இடித்துப்பிழிந்து தேங்காய்ப்பாலில் சாப்பிடவும்.

1096. பாவட்டாதி: பாவட்டை ரஸம் பிழிந்து எண்ணையில் சாப்பிடவும். முன்குணமுண்டாம்.

1097. அமரியாதி: அமரி இலை பொடிசெய்து தேனில் சாப்பிடவும். முன்குணமுண்டாம்.

1098. நிசாதி: எண்ணையும், மஞ்சளும் சேர்த்துச் சுடவைத்துத்தேய்க்கவும், கெண்டைதீரும்.

1109. காச்மர்யாதி : குமிழின் வேர்ப்பட்டை, மஞ்சள், சேர்த்து அரைத்துத் தேய்க்கவும். வாதம் தீரும்.

1100. கரும்தாளி ஆதி : கருந்தாளி, வசம்பு, கோரைக் கிழங்கு இவை தட்டிப்போட்டு நெய்வடித்துச் சாப்பிடவும். தூக்கம் வராது.

1101. விஷ்ணுகிராந்தி ஆதி : விஷ்ணுகிராந்தி, சுக்கு கஷாயம் வைத்து அந்த கஷாயத்தில் பால்சேர்த்துக்கஞ்சிவைத்துச் சாப்பிடவும். தூக்கம் போகும்.

1102. பில்வாதி : வில்வவேர்ப்பட்டையை மோரில் அரைத்துச்சாப்பிடவும். தூக்கம் வரும்.

1103. வெள்ளைக்குங்கிலியம் பொடிசெய்து வெண்ணையில் சாப்பிடவும், கபம் தீரும்.

1104. தத்தூராதி : ஊமத்தம் கரியைப்பொடித்துத் தேனில் சாப்பிடவும். எருமைப்பாலும் சேர்க்கவும். கபம் தீரும்.

1105. முஸல்யாதி : நிலப்பனைக்கிழங்கும், நாயுருவி நுனியும், சேர்த்து அரிசி கழுவின நீரில் சாப்பிடவும். பெரும்பாடு தீரும்.

1106. ஜீரகாதி : ஜீரகம் அரைத்துக் குழப்பி வடித்தநெய் சாப்பிடவும். பெரும்பாடு தீரும் :

1107. திருணபஞ்சமூலாதி : திருணபஞ்சமூலம், மூவிலை, இவை தனித்தனியாகக் கஷாயம்வைத்துப் புரசம் இலை இடித்து ரஸம் சேர்த்து புடையாவு கல்கம்சேர்த்து, வடித்தநெய் சாப்பிடவும் பெரும்பாடு தீரும்.

1108. புடையாவு : புடயாவு கஷாயம் வைத்து அதையே கல்கம்சேர்த்து பாலும்சேர்த்து நெய்வடித்துச்சர்க்கரை சேர்த்துச் சாப்பிடவும். பெரும்பாடு தீரும்.

1109. துரோண புஷ்பீ ஆதி : தும்பைவேரும், சுக்கும் கஷாயம்வைத்துப் பெருநாயுருவிகஷாயம் சேர்த்து நெய்யில் கலந்து சாப்பிடவும். பெரும்பாடு தீரும்.

1110 பலாதி : கல்கத்துக்கு எட்டுமடங்கு குருந்தொட்டி கஷாயம் வைத்து எட்டுமடங்கு பால் சேர்த்து குருந்தொட்டி கல்கம் சேர்த்து எண்ணெய்வடித்துச் சாப்பிடவும் நெய்வடித்தும் சாப்பிடலாம். அஸிருக்தரம் தீரும்.

1111. நால்பால்மராதி : நால்பால்மரமும், குன்னிவேரும், கஷாயம்வைத்து மஞ்சள் இடித்துப்பிழிந்த ரஸமும் சேர்த்து

அதிமதுரம் கல்கம்சேர்த்து வடித்த நெய் சாப்பிடவும். சொரி சிரங்கு தீரும்.

1112. மரிசாதிலேகியம் : பழைய மிளகு, ஓமம், வகைக்கு அரைகிலோ, ஜீரகம் கடுக்காய்தோல் 25 கிராம் திப்பிலி 15 கிராம் (ஒரு பலத்தில் மூன்றில் ஒருபாகம்) கிராம்பு 10 கிராம் இவைகளை ஒரு லிட்டர் கோமயத்தில் 12 மணிநேரம் ஊறவைத்துப் பிறகு காயவைத்துப் பொடிசெய்து அரைலிட்டர் நெய், கால் லிட்டர் விளக்கெண்ணை, 60 மிலிலிட்டர் நல்லெண்ணை, சேர்த்து இரண்டு உருண்டை வெல்லம் சேர்த்து லேகியம்செய்து இரண்டு நேரம் சாப்பிடவும். சூலை தீரும்.

1113. பீளைவேர் ஆதி : (ஒன்பதாவது மாதம்) பீளைவேரும், அதிமதுரமும் கல்கம்சேர்த்துப் பால்கலந்து நெய் இளம் பதத்தில் வடித்துச்சாப்பிடவும். இவ்விதம் எண்ணெய்யும் வடித்துச் சாப்பிடவும். சுகப்பிரஸவம் ஆகும்.

1114 க்ஷீரபலா : க்ஷீரபலை உடம்புக்குத் தேய்க்கவும் பாடக் கிழங்கை எண்ணெயில் சாப்பிடவும் சுகப்பிரஸவம் ஆகும்.

1115. விஷ்ணுகிராந்தி : விஷ்ணுகிராந்தி ரஸத்தையோ ஊரகத்தின்வேரையோ ஓரிலைவேரையோ எண்ணெயில் சாப்பிடவும். முன்குணமுண்டாம்.

1116. மூன்றுபூ உள்ள மூக்குற்றிவேர் கொட்டிப் போகாமல் எடுத்து எண்ணெயில் சாப்பிடவும். முன்குணமுண்டாம்.

1117. குஞ்சிரிக்கை சமூலம் அரைத்துத் தேனில் குழப்பி வயிற்றிலும் யோனியிலும் தடவவும், சுகப்பிரஸவம் ஏற்படும்.

1118. சதாவரியாதி : சதாவரிரஸம். நெரிஞ்சில்கல்கம் சேர்த்து இரு மடங்கு பால்சேர்த்து நெய்வடித்துச்சாப்பிடவும். மூத்திர கிருச்சிரம் தீரும்.

1119. பஞ்சமூலாதி : பஞ்சமூல கஷாயம்வைத்து வடித்த நெய்யைச் சாப்பிட்டுவர கிருச்சிரம் தீரும்.

1120. பொன்னுங்காணி ஆதி : பொன்னுங்காணி மீனங் காணி, கல்கம் சேர்த்து இருமடங்கு பால்சேர்த்து வடித்த நெய் யைச்சாப்பிடவும். சுக்லஸ்ராவம் தீரும்.

1121. ரம்பா ஆதி : கதளிவாழைக்கிழங்கு கல்கம்சேர்த்துப் பால்விட்டு நெய்வடித்துச்சாப்பிடவும். முன்குணமுண்டாம்.

1122. க்ஷீராதி : பால், கதலிப்பழம், பாவல்கிழங்கும், சேர்த் துவடித்த நெய் சாப்பிடவும். முன்குணமுண்டாம்.

1123. முஸல்யாதி: நிலப்பனைக்கிழங்கு சதாவரிக் கிழங்கு கஷாயம்வைத்து நெரிஞ்சில் கல்கம் சேர்த்து, இருமடங்கு பாலும் சேர்த்து, நெய் வடித்துச் சாப்பிடவும். சுக்லஸ்ராவங்கள் தீரும்.

ஊரகாதி: ஊரகமும், குருந்தொட்டியும், கஷாயம்வைத்து அரக்கு மேம்பொடி சேர்த்துச் சாப்பிடவும். வெள்ளை வெட்டை தீரும்.

கதள்யாதி: கதளிப்பழத்தில் அரக்குப் பொடிசேர்த்துச் சாப்பிடவும். முன்குணமுண்டாம்.

கருங்காரைப்பட்டையாதி: கருங்காரைப்பட்டை இடித்துப் பிழிந்த ரஸத்தில் குருந்தொட்டியும், ஊரகமும், கல்கம் சேர்த்து எட்டுமடங்கு பால்சேர்த்து வடித்தநெய்யைச் சாப்பிடவும். முன் குணமுண்டாம்.

பலாத்ரயாதி: சித்தாமுட்டி பேராமுட்டி நாகபலை இவைகளின் கஷாயத்தால் அஸ்திஸ்ராவம் தீரும்.

மரிசாதி: ஒட்டரைக்கரியும், மூன்று வருஷம் பழகிய மிளகும் வகைக்கு மூன்றுபலம் சேர்த்து நெய்வடித்துச் சாப்பிடவும். ரக்தவாந்தி தீரும்

அர்காதி: எருக்கம்வேரும், முருங்கைவேரும், மோரில் அரைத்துச்சாப்பிடவும். குடல்வாதம் தீரும்.

தார்தாவு ஆதி: சிகப்புதார்தாவின் வேரை மோரில் அரைத்துச்சாப்பிடவும். வயிற்றுப்போக்கு தீரும்.

அபாமார்காதி: நாயுருவி, ஊமட்டி, மாதுளை, இவைகளின் ரஸப் சேர்த்து ஜீனி கலந்து சாப்பிடவும். ரத்தப்போக்கு நீங்கும்.

லிங்காதி: லிங்கம், வஜ்ரக்ஷாரம், வெண்காரம், திப்பிலி இவை சமம்சேர்த்து மிளகளவு குளிகைசெய்து சாப்பிடவும் க்ஷயம், இளைப்பு தீரும்.

வராஹவஸாதி: பன்றிநெய்யை 21 தடவை கோமூத்திரத்தில் உருக்கிவிட்டுக் கடைந்து பூசவும். பாதகுஷ்டம் தீரும்.

சுண்டியாதிவர்த்தி: சுக்கு, மிளகு, திப்பிலி, மனோசிலை, இவை சமஎடை எடுத்து கருசலாங்கண்ணி ரஸத்தில் அரைத்துத் துணியில் தடவி நெய்யில் நனைத்துப் புகைபிடிக்கவும். சுவாஸம், காஸம், தீரும்.

ஜீவந்தியாதி: அடபதியன் கிழங்கு, மஞ்சிஷ்டி, மரமஞ்சள், கம்பிப்பாலை, பால்துத்தம், நெய், எண்ணை, இவை கலந்து காய்ச்சி, குங்கிலியம், மெழுகு இவைகளைப் பாத்திரத்தில் போட்டு வடித்து கால்கை வெடிப்புகளுக்குப் பூச குணமாகும்.

தந்தியாதி: நாகதந்திவேர்ப்பட்டை, சிவதைவேர், இந்துப்பு, மனோசிலை, பொன்னரிதாரம், திப்பிலி, இவை சமன் எடுத்துப் பொடிசெய்து வஸ்திரகாளிதம் செய்து நெய் தேன் விட்டு அரைத்துத் திரியில் தடவி மூக்கில் பீனஸத்திற்குத்தடவவும். பீனஸங்கள் போகும்.

ஸாமுத்ராதிவர்த்தி: உப்புத்தண்ணீரும் தேனும் சேர்த்து இரும்பு பாத்திரத்தில் காய்ச்சி கெட்டியாகும்பொழுது எடுத்து துணியில் தடவி கட்டைவிரல் கனத்திற்கு திரிசெய்து விளக்கெண்ணெயில் பிரட்டி ஆஸனத்வாரத்தில் வைக்கவும். திரி மலத்தில் பட்டால் மலம் இளகிவரும். மலக்கட்டு தீரும்.

சுத்தபலாதைலம்: சுத்தபலாதைலம் காய்ச்சி உடம்பிற்குத் தேய்க்கவும். மூத்திராதிசாரம் தீரும். மூத்திராதிசாரத்தில் பின் வரும் மருந்துகளும் குணம்தரும்.

சதுச்சீதாதி: சதுச்சீதம் இடித்துப்பிழிந்து குருந்தொட்டி கல்கம்சேர்த்து எண்ணெ காய்ச்சித் தேய்க்கவும்.

ரம்பாதி: கதளிப்பழமும் சிலாஜதும் கலந்து சாப்பிடவும். ஒரிலைத்தாமரையை கஷாயம்வைத்துச் சாப்பிடவும். வெள்ளை மந்தாரைப்பூ அரைத்துப்பொடித்து நுரைப்பாலில் சாப்பிடவும். சிறியவாராஹி கிருதம் சாப்பிடவும். வஸ்தியாமயாந்தகம் கிருதம் சாம்பிடவும்.

நாபி ஆதி: நாபிக்கிழங்கை அரைத்து ஆண் குறியில் தேய்க்கவும். மூத்திரம் இறங்கும். அல்லது நெல்லிக்காயை நெய்யில் வறுத்துத் தேய்க்கவும்.

அதிக மூத்திரம் குறைய நிசாதி: மஞ்சள் பொடியில் சர்க்கரை கலந்து அரிசி கழுவின நீரில் சாப்பிடவும். அதிக மூத்திரம் தீரும்.

ரக்தத்துடன் போகிற மூத்திரத்திற்கு கேரீ ஆதி: செந்தேங்கின் இளநீரில் தேத்தாங்கொட்டையை அரைத்துச் சாப்பிடவும். மூத்திரத்துடன் போகும் ரக்தம் நிற்கும்.

குளவி கடித்தால் தகராதி: தகரையை இடித்து ரஸம் எடுத்து தாரைசெய்யவும். குளவிகடி தீரும்.

தலைவலிக்கு நிசாதி: மஞ்சள் பொடிசெய்து துணியில் தேய்த்துக் காயவைத்து எண்ணெயில் நனைத்துப் புகைபோடவும். தலைவலி தீரும். தலையில் காயம்பட்டால் ஓமம் பொடி செய்து போடவும்.

நெருப்புசுட்ட புண்ணிற்கு: தாழை இலையை இடித்து ரஸம் எடுத்து தாரை செய்யவும். தாழைஇலைச்சாம்பலை வெண்ணை யில் கலந்து போடவும்.

ரக்தம் பெருகுவதற்கு: மூக்குற்றியை அரைத்து எண்ணை யில் சாப்பிடவும். ரக்தம் பெருகுவது நிற்கும்

வெட்டுக்காயத்திற்கு: திரைலோக்ய மோஹினியை மஞ்சள் பாலில் அரைத்து எண்ணை கலந்து போடவும்.

கூகைநீர் ஆதி: கூகைநீர் 200 கிராம் குந்துருக்கம் 150 கிராம், செந்நிநாயகம் 50 கிராம், அபின் 25 கிராம், இவைபொடி செய்து கற்ருழை ரஸத்தால் அரைத்துப்பூசவும். மர்மக்ஷோபம், குத்துவலி சூடு, சீழ்முதலியன தீரும்.

அயனக்குழம்பு: நெட்டாநடுங்கி, சீந்திற்கொடி, பசுமஞ்சள், பாக்குப்பழத்தின்தோல், தலைநீளி, தண்ணீர்விட்டான் கிழங்கு, அருகம்புல், சமம் எடுத்து இடித்து ரஸம்பிழிந்து கதளிப்பழம், இந்துப்பு, கலந்து வெண்ணை சேர்த்துப் போடவும். புண்கள் தீரும்.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHANOT BROTHERS
(REGD.)

Wholesale Musk, Saffron and Indian Drugs
Merchants,

LUDHIANA - PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்

இம்ப்காப்ஸ்

பூரண இயந்திர சாதன வசதியோடு சுத்தமான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளை தயாரிக்கிறது

இந்திய மருத்துவ முறையின்படி வைத்தியம் செய்யும் மருத்துவர்கள் 1944-ம் ஆண்டிலேயே முதன்முதலாகக் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் ஒரு மருந்து சாலையை நிறுவினர். சுத்தமான மருந்துகளை தயாரித்து ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவ முறைக்குச் சேவை செய்வதுடன், நம் நாட்டு மருந்து மூலிகைகளை ஆராய்ந்து, புராதன மருத்துவ வல்லுநர்கள் பின்பற்றிய முறையை ஒரு நிலைப்படுத்துவதே இதன் நோக்கம். இதில் நாங்கள் நம்பிக்கையோடு முன்னேறினோம். இப்போது நவீன இயந்திர சாதன வசதிகளுடன் மருந்துகளை பக்குவமாகத் தயாரிப்பதில் பூரணத்துவம் பெற்று மக்களுக்குத் திறமையாக சேவை புரிகிறோம்.

இம்ப்காப்ஸ் தேசமக்களை ஆரோக்கியமாகவும் வலிவுள்ளவர்களாகவும் இருக்க துணை செய்கிறது.

தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ்
கோவாப்ரேடிவ் பார்மஸி
அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.
லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு. சென்னை-20

IMPCOPS

பிரபலமான கெமிஸ்டுகள் மற்றும் டிரக்கிஸ்டுகளிடம் கிடைக்கும்

மற்ற அலுவலகங்கள்:

4/166, மௌண்ட்ரோடு, மதராஸ்-2 போன்: 86520
48, தெற்குமாசி வீதி, மதுரை P.O.
27, காசிவிஸ்வேஸ்வரன் கோயில் தெரு,
சுல்தான்பேட்டை, பெங்களூர்-2 (மைசூர் ஸ்டேட்)



maa/IMP./747/M-TA

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)

Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma. Published by Dr. T. S. Iswaran. L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam, at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2. Printed at Githa Press, Tiruchirapalli-2.